## பொல்பித்திகம பிரதேச சபை
## குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொல்பித்திகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொங்கிரீட் செயற்திட்டத்திலிருந்து கிடைத்த ரூபா 283,270 தொகையான நட்டம் வருமான செலவின கணக்கிற்கு கொண்டுவரப்படவில்லை. | வருமான செலவின கணக்கில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் திரண்ட நிதியத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 476,000 தொகையான வீதி விளக்கு உபகரணங்கள் கணக்கில் கணக்கீடு செய்யப்படவில்லை. | ஆண்டின் கொள்வனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் சரிசெய்யப்படும். |
| (இ) | காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடு சரிசெய்வதற்காக நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் ரூபா 569,473 பெறுமதியான சொத்துக்கள் குறிப்பாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக காணி மற்றும் கட்டிடங்கள் அப்பெறுமதியால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | குறிப்பாக இனங்காணப்பட்ட சொத்துக்கள் பட்டோலைகளுடன் சரியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2008 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டுவரப்படுகின்ற மீதியாக இருந்தமையால் ஆராய்ந்து பார்த்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் போது 03 நிர்மாணங்களுக்குரிய ரூபா 422,270 தொகையான நிறுத்தி வைத்தல் பணம் செலுத்த வேண்டிய மீதியாக பதியப்படாமல் நாட்குறிப்பு 42 இன் மூலம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | நிறுத்தி வைத்தல் பணம் செலுத்த வேண்டிய மீதியாக பதியப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் சரிசெய்யப்படும். |
| (உ) | மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதியளுக்குரியதாக நிதி நிலைமைக் கூற்றின் மீதிக்கும் பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 8,286,719 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கம் செய்து கணக்குகளை சரியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது பட்டோலைகள் மற்றும் கணக்குகளுக்கிடையே மீதிகளை இணக்கம் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ | ரூபா 121,194,369 பெறுமதியான 08 கணக்கு மீதிகளுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்பிகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தரிடம் விசாரித்து உரிய சான்றுகள் எதிர்வரும் ஆண்டின் போது பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(i) ஆம் பிரிவு | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் புதிய அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள ஆதனங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் இனங்காணப்பட்டிருந்தும் எதிர்வரும் வருடத்தின் போது மேலும் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்படவில்லை. | | இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(2) | வைப்புச் செய்யப்பபட்டு 02 வருட காலத்தை கடந்த வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுகக்க வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,243,418 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,636,803 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| i. | வீதவரியும் வரியும் | 1,975 | 11 | 2,357 | - | 316 | 438 | 424 | - |
| ii. | வாடகை | 7,585 | 6,780 | 7,775 | 11 | 6,998 | 6,696 | 6,635 | 11 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 850 | 2,275 | 1,066 | - | 2,180 | 2,737 | 2,726 | - |
| iv. | ஏனைய வருமானம் | 76,381 | - | 56,318 | 19,651 | 59,919 | 50,813 | 57,141 | 26,478 |
| | மொத்தம் | 86,791 | 9,066 | 67,516 | 19,662 | 69,413 | 60,684 | 66,926 | 26,489 |

### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 2.7 மில்லியனாக இருந்த போதிலும் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதிலுள்ள தாமதம் மற்றும் சுகாதார சேவை அனுமதிப்பத்திரக் கட்டணம் குறைவாக அறவிடல் போன்றவற்றின் காரணமாக மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 1 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. | அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அனுபவமுள்ள உத்தியோகத்தரை நீக்கி புதிய உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டதன் காணமாக இனங்காண்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 5,160,000 ஆக கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2018 நவம்பர் மாதத்திற்குரிய ரூபா 590,500 தொகை மற்றும் திசெம்பர் மாதத்திற்குரிய நீதிமன்றத் தண்டப் பணம் செலுத்த வேண்டிய மீதியில் உள்ளடக்கப்படவில்லை. | நீதிமன்றத் தண்டப் பணம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஆண்டிற்குரிய சரியான வருமானம் மாகாண சபையிலிருந்து இனங்கண்டு அறவிடுவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணமாக ரூபா 9,156,000 தொகை கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2018 யூலை 01 முதல் 2018 திசெம்பர் 31 வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முத்திரைக் கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஆண்டிற்குரிய சரியான வருமானம் மாகாண சபையிலிருந்து இனங்கண்டு அறவிடுவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 வது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 12 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | சபையின் தேவையின் பிரகாரம் உப விதிகளை விதிப்பதற்கும், விதிக்கப்பட்டுள்ள உப விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உப விதிகளை தயாரிக்கும் நடவடிக்கைகளை சபைக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப வதிகள் மற்றும் சபையினால நிறைவேற்றப்பட வேண்டிய 12 இலக்குகளை மேவுகை செய்யும் வகையில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. |

(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| உக்காத கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்கோ அல்லது விற்பனை செய்து வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை | கழிவு பொருட்களை உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்ய வேண்டும். | கழிவுப் பொருட்கள் இந்த காணியில் போடப்பட்டிருந்த போதும் இதில் இழப்பு |

| | | |
|---|---|---|
| எடுக்காமல் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தில் அமைந்துள்ள காணியின் பின் பக்கத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | | ஏற்படவில்லை என்பதை அறியத் தருகின்றோம். |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபையினால் அறிவிக்கப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் மக்களின் பல்வேறு தேவைகளுக்காக 15 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். | 15 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 1999 யூலை 13 ஆம் திகதி வருடாந்தம் 2.5 சதவீத வட்டியின் அடிப்படையில் இலங்கை உள்ளூாட்சி சேவை பொதுச் சங்கத்தில் வைப்புச் செய்யப்பட்ட 50,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய வட்டியை வருடாந்தம் அறவிடுவதற்கோ அல்லது முதலீடு செய்யப்பட்ட பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என்பதை குறிப்பிடுகின்றோம். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்றாம் நிலை பதவியில் வெற்றிடம் 01 ஆகவும், இரண்டாம் நிலைப் பதவியில் 08 வெற்றிடங்களும், | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | எதிர்காலத்தில் மிகைப் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலைப் பதவியில் 07 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி அமைய/ ஒப்பந்த அடிப்படையில் 08 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | வேண்டும். | |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2003 ஆம் ஆண்டு முதல் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற மினி குபோட்டா டெக்கர், மோட்டர் சைக்கிள், பிரதேச செயலாளருக்கு சொந்தமாக காணப்பட்ட புறநெகும கட்டிடம் காணப்படுகின்ற காணி மற்றும் சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள 128 மயான நிலங்கள் என்பவற்றை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்ட ரீதியான ஆவணங்கள் இல்லாமையினால் சபைக்கு கையேற்பதற்கு முடியாதிருந்தமை, புறநெகும காணியை கையேற்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமை மற்றும் 129 மயான நிலங்களில் ஒன்று கையேற்கப்பட்டுள்ளது. 128 மயான நிலங்களும் கையேற்கப்பட வேண்டி இருந்ததுடன் அளவை நடவடிக்கைகளுக்காக அதிக செலவினமொன்றை செய்ய வேண்டியிருந்தமை இதற்கான காரணமாக இருந்தது. |

#### 3.4.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குபோட்டா கை உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பல வருட காலம் முதல் விளைவற்று காணப்பட்ட போதும் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வில் சிபாரிசு செய்யப்பட்ட பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொருள் மெய்மெய்யாய்வு சிபாரிசினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பயன்படுத்துவதற்கு முடியாதுள்ளது. |

### 3.4.3 அறவிடப்படாத ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இடம் மாற்றலாகிச் சென்ற ஊழியர் ஒருவரிடமிருந்து ரூபா 232,406 தொகையும், ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 3,542 தொகையும், மரணமடைந்த 03 அமைய தொழிலாளர்களிடமிருந்து ரூபா 3,212 தொகையும் ஆக கூட்டு மொத்தமாக ரூபா 239,159 தொகை அறவிடப்படாத கடன் மீதியாக காணப்பட்டது. | அறவிடப்படாத ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து கழிப்பதாக அறிவிக்கப்பட்ட போதிலும் சபைக்கு இன்னும் செலுத்தப்படவில்லை. |

### 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஏதிர்வரும் வருடத்தில் சமர்ப்பிக்கப்படும். |

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் உக்காத கழிவுகளை களஞ்சியப்படுத்துவதற்கு ரூபா 733,687 தொகை செலவில் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் (இரண்டாவது கட்டம்) வேலை விடய இலக்கம் 01 இன் கீழ் 28 மில்லி மீற்றர் கனத்தில் பலகை பயன்படுத்தி கதவு பொருத்துவதற்கு 6.39 சதுர மீற்றருக்காக ரூபா 104,796 தொகை செலுத்தப்பட்ட போதிலும் வழங்கப்பட்டு பொருத்தப்பட்ட | நிர்மாண நடவடிக்கைகளின் குறைபாடுகள் சரி செய்யப்பட வேண்டும். | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கதவின் ஓரங்களில் பலகை தடிப்பு 23 மில்லி மீற்றர் மாத்திரமாக இருந்தது. கதவின் ஓரங்களில் பொருத்துவதற்கு ஆலோசனையின் பிரகாரம் அலுமினிய மூட்டுக்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அலுமினிய பூச்சுக்கள் பூசப்பட்ட பொருத்திகள் இணைக்கப்பட்டிருந்தன. 04 யன்னல்கள் அவ்வாறு பொருத்தப்பட்டிருந்ததுடன் சகல கதவுகளும் 10 மில்லி மீற்றர் அளவான பலகை போடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2015 திசெம்பர் 30 ஆம் திகதிய நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் 2016/01 ஆம் இலக்கத்தின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் வீதிகளை நிர்மாணிக்கும் போதும் அபிவிருத்தி செய்யும் போதும் கிரவல் பரவுதல் போன்ற தற்காலிக வேலை செய்யமுடியாதிருந்தது என காண்பிக்கப்பட்ட போதிலும், 2016 ஆம் ஆண்டில் 03 வீதிகளுக்கு கிரவல் இடுவதற்காக ரூபா 422,278 தொகையும், 2018 ஆம் ஆண்டில் 11 வீதிகளுக்கு கிரவல் இடுவதற்காக ரூபா 1,367,391 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் பரிசோதனை சந்தர்ப்பத்தில் வீதிகளில் கிரவல் கழுவிச் செல்லப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதிகள் கழுவிச் செல்லப்பட்டு பாதிப்பிற்கு உட்பட்டிருந்தது. |
| (இ) | உத்துருவெல்ல நீர் செயற்திட்டத்தின் நீர் தாங்கியை நிர்மாணிக்கும் வேலையின் வேலை விடய இலக்கம் 04 முதல் 15 வரை நிர்மாணங்கள் 1:1/2 3:(20m) கொங்கிரீட் இடுவதற்கு 16.99 கன மீற்றருக்காக ரூபா 379,355 தொகை செலுத்தப்பட்ட போதும் கொங்கிரீட் தூண் மற்றும் தூண்களைப் பொருத்தும் தூண்களின் இடங்களில் 3x1 அடி அளவில் தேன் கூடுகள் 8 இடங்களிலும், நீர் தாங்கி நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் தட்டின் 5 இடங்களிலும் 2x1 அடி அளவில் தேன் கூடுகளும் காணப்பட்டிருந்தன. வேலை விடய இலக்கம் 47 முதல் 56 வரை நீரைச் சேகரிக்கின்ற பொறோ சீமெந்து தாங்கி | நிர்மாண நடவடிக்கைகள் சரியான மேற்பார்வையின் கீழ் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

நிர்மாணிப்பதற்காக ரூபா 352,995 தொகை செலுத்தப்பட்ட போதிலும் தாங்கியின் 04 இடங்களில் வெடிப்புக்களும் கீறல்களும் அந்த இடத்தில் காணப்பட்டன.

### 3.5.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 மே 20 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட ரூபா 1,283,910 பெறுமதியான 04 மிகைக் கட்டணங்கள் தொடர்பாக 2019 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்து முடிவுறுத்தப்படவில்லை. | மிகைக் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதம அமைச்சின் பரிசோதனை முடிவடையும் வரை நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் உள்ளக கணக்காய்விற்காக உத்தியோகத்தர் நியமிக்கப்பட்ட போதிலும் அந்த உத்தியோகத்தருக்கு வேறு கடமைகளும் கையளிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டில் உரிய போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் கணக்காய்வு மேற்கொண்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் 03 ஐய வினாக்களும் 2019 ஆம் ஆண்டில் 02 ஐய வினாக்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |